## ஆய்வுப்பொருள்: இரண்டு:-
## இறையருளை வழங்கும் அருளடையாளங்கள்

12

### 2.4. இன்றைய உலகில் கிறிஸ்தவ திருமணம்

(மணமகனின் பெயர்) என்னும் நான்
(மணமகளின் பெயர்) என்னும்
உம்மை என் மனைவியாக
ஏற்றுக்கொள்கின்றேன்.
இன்பத்திலும், துன்பத்திலும்,
உடல் நலத்திலும், நோயிலும்
நான் உமக்குப்
பிரமாணிக்கமாக இருந்து
என் வாழ்நாளெல்லாம்
உம்மை
நேசிக்கவும் மதிக்கவும்
வாக்களிக்கின்றேன்.

(மணமகளின் பெயர்) என்னும் நான்
(மணமகனின் பெயர்) என்னும்
உம்மை என் கணவராக
ஏற்றுக்கொள்கின்றேன்.
இன்பத்திலும், துன்பத்திலும்,
உடல் நலத்திலும், நோயிலும்
நான் உமக்குப்
பிரமாணிக்கமாக இருந்து
என் வாழ்நாளெல்லாம்
உம்மை
நேசிக்கவும் மதிக்கவும்,
வாக்களிக்கின்றேன்.

- மேற்கூறப்பட்ட திருமண வாக்குறுதியை நன்றாக வாசிக்கவும்.
- அதிலே அடங்கியுள்ள முக்கிய கருத்தைக் கண்டறியவும்.
- இவ்வாக்குறுதியை நிறைவேற்றுபவர்கள் யார்?
- தம்பதியர் இவ்வாக்குறுதியை எவ்வளவு காலத்திற்குக் கடைப்பிடித்து நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளனர்?
- இன்று எமது குடும்பங்களில் இவ்வாக்குறுதி நிறைவேற்றப்படும் விதத்தை அறிந்து எழுதுக.



இலவச விநியோகத்திற்காக

**திருமணம் என்பது**

தம்பதியர் ஒருவர் ஒருவரை நன்கு புரிந்து,
விளங்கிக்கொண்டு, அன்பு செய்து,
குழந்தைகளைப் பெற்று வளர்க்க
உடல், உளரீதியாக ஒருவருக்கு ஒருவர்
தம்மை முழுமையாக அர்ப்பணித்து,
இறுதிவரை இன்ப துன்பங்களில் பங்கெடுத்து,
நல்ல கிறிஸ்தவர்களாக வாழவும்,
தங்கள் குழந்தைகளை
நல்ல கிறிஸ்தவர்களாக வளர்க்கவும்
வல்லமையும் கடமையும் தருகின்றது.

**கிறிஸ்தவ திருமணம் என்பது**

திருமண உடன்படிக்கையால், ஓர் ஆணும் ஒரு
பெண்ணும் தங்கள் வாழ்வு முழுவதற்குமான ஓர் உறவுச்
சமூகத்தைத் தங்களிடையே ஏற்படுத்துகின்றனர்
இவ்வுடன்படிக்கை, தன் இயல்பிலே மணமக்களின்
நலனுக்காகவும் மகப்பேறு மற்றும் குழந்தை
வளர்ப்புக்காகவும் அமைந்துள்ளது. இது திருமுழுக்குப்
பெற்றவர்களிடையே ஓர் அருளடையாள மாண்பிற்கு
ஆண்டவராகிய கிறிஸ்துவினால் உயர்த்தப்பட்டுள்ளது.
(திருச்சபைச் சட்டத்தொகுப்பு # 1055)



இலவச விநியோகத்திற்காக

இறைவன் முதல் மனிதனாகிய ஆதாமைப் படைத்தபோது,

> ஆண்டவராகிய கடவுள், மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று; அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன் என்றார்.
>
> (தொ.நூ. 2:18)

மேற்கூறப்பட்ட வார்த்தைகளைக் கூறி திருமணத்தை ஏற்படுத்தினார்.

- பின்வரும் இறைவார்த்தைப் பகுதியை வாசித்து சிந்திக்கவும்.
  தொடக்க நூல் 2:20-23

இத் திருமண உடன்படிக்கையை இயேசு அருளடையாளம் என்ற நிலைக்கு உயர்த்தினார்.

> ''...எனவே, கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்'' என்றார்.
>
> (மாற். 10:9)

திருமணம் ஓர் அருளடையாளம். தம்பதியர் ஒன்றித்து வாழ்நாள் முழுவதும் சேர்ந்து வாழ விரும்பி இறையாசீருடன் இல்லற வாழ்வைத் தொடங்கும் நிகழ்வே இதுவாகும். திருமணத்தின்போது கிறிஸ்து தம்பதியரைச் சந்தித்து தூய ஆவியின் வழியாக அவர்களைப் புனிதப்படுத்தி தம் அருளை வழங்குகின்றார். மேலும், தம்பதியர் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டிய ஆற்றலையும், புதிதாக தாம் உருவாக்கும் குடும்பத்தில் இறைவனின் புனிதத் தன்மை நிலவுவதற்கும் வேண்டிய வரங்களை இறைவன் அளிக்கின்றார்.



இலவச விநியோகத்திற்காக



**இவ்வருளடையாளத்தைப் பெறும் தம்பதியர் :**

- வாழ்நாள் முழுவதும் கணவன் மனைவியாக அன்புறவில் நிலைத்திருக்க வேண்டும்.
- இன்ப, துன்பங்களுக்கு முகம் கொடுத்து வாழத் தயாராக வேண்டும்.
- தமக்கு இறைவனால் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும்.
- அன்பிலும், புரிந்துணர்விலும், விசுவாசத்திலும் வாழ வேண்டும்.
- ஒருவர் ஒருவருக்கு உண்மை உள்ளவராகவும், நேர்மை உள்ளவராகவும் வாழ வேண்டும்.
- ஒருவர் ஒருவருக்கு உள்ளத்தாலும், சொல்லாலும், செயலாலும் தீமை செய்யாதிருக்க வேண்டும்.
- திருமணத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாக்க வேண்டும்.
- இறைவன் தமக்கு அருளும் பிள்ளைகளை கத்தோலிக்க விசுவாசத்திலும் உலக அறிவிலும் வளர்க்க வேண்டும்.

**மேற்கூறப்பட்ட முறையில் இவர்கள் வாழ இவ்வருளடையாளத்தின் மூலம் இறையாசீர் வழங்கப்படுவதோடு, இறைப்பிரசன்னமானது அவர்களோடு இருந்து அவர்களை ஆசீர்வதித்து, திடப்படுத்தி, வழிநடத்துகிறது.**

- திருமணம் அருளடையாளமாக நிறைவு பெறுவதற்கு தேவையான முக்கிய காரணங்களை எழுதுக.



இலவச விநியோகத்திற்காக

திருமணச் சட்டத்தில்
திருப்பலிக்கு வெளியே
திருமணம் செய்வதைவிட,
திருப்பலியில் திருமண அருளடையாளத்தைப்
பெறவேண்டும் என்று தம்பதியர் பரிந்துரைக்கப்படுகின்றனர்.
திருப்பலியில் இயேசு தன்னையே கையளிப்பதுபோல
மணமக்கள் இருவரும் ஒருவரை ஒருவர்
தங்களுக்குக் கையளிக்கின்றனர்.
அப்பமும், இரசமும் ஒன்றாய் இருப்பதுபோல
மணமகனும், மணமகளும் ஒரே உடலாய் உள்ளனர்.
திருமணத்தைத் தகுதியான முறையில் பெறுவதற்கு
மணமக்கள் பாவங்களில் இருந்து விடுதலை பெற வேண்டும்.
மணவாழ்க்கையின் நோக்கங்களை
நன்கு அறிந்திருக்க வேண்டும்.
திருச்சபையின் திருமணச்
சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

கத்தோலிக்க திருச்சபையின்
மறைக்கல்வி # 1621

கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான் இருவரும் ஒரே உடலாய் இருப்பர்.

(தொ.நூ. 2:24)

- பின்வரும் இறைவார்த்தைப் பகுதிகளை வாசித்து விளங்கிக்கொள்ளவும்.

மத்தேயு 19:5-6 மாற்கு 10:6-9



இலவச விநியோகத்திற்காக

திருமண வாழ்வு,
மற்றும் திருமண அன்பினால்
உருவாகும் நெருங்கிய உறவுச் சமூகத்தைப்
படைப்பின்போது கடவுள் ஏற்படுத்தினார்.
அதற்குரிய ஒழுங்கமைப்புக்களையும்
அவரே அளித்தார்.
இந்த உறவுச் சமூகம் திருமண உடன்படிக்கையில்,
அதாவது ஆள்நிலை சார்ந்ததும்,
பின்வாங்கக் கூடாததுமான இசைவின்மேல்
கட்டி எழுப்பப்படுகின்றது.
இந்தத் தூய பிணைப்பு மணமக்கள், குழந்தைகள், சமுதாயம்
ஆகியோரின் நன்மைக்காக நிலைநிறுத்தப்படுகிறது. ஆகவே இது
மனிதருடைய விருப்பு வெறுப்பு சார்ந்த தீர்ப்புக்கு உட்பட்டதல்ல.
திருமண அன்பும், திருமண அமைப்பும் தம் இயல்பிலேயே
பிள்ளைகளைப் பெற்றுப்
பயிற்றுவிப்பதற்கு என அமைந்துள்ளன. பிள்ளைகளே
ஒருவிதத்தில் அவற்றின் மணிமகுடமாக
விளங்குகின்றனர்.

2ம் வத்திக்கான் சங்க ஏடு
இன்றைய உலகில் திருச்சபை # *48*

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள ஒன்றிப்பானது, ஒருவரிடமிருந்து மற்றவருக்கு சுதந்திரமாக உள்ளத்திலிருந்து எழும்பும் பாசத்தால் காட்டப்படுகின்றது. எனவே உடல், உள்ளம் சார்ந்த செயற்பாடுகளுக்கு ஒரு தனிப்பட்ட மாண்பை அளிக்கும் திறன் இவர்களின் அன்புக்கும் ஒன்றிப்புக்கும் உண்டு. திருமண அன்பு திருமணத்திற்கே உரிய தாம்பத்திய உறவில் சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்படுகின்றது; முழுமையடைகின்றது. ஆகையால், இச்செயல்கள் நேர்மையானவை. மாண்பு பெற்றவை. திருமண அன்பு ஒருவருக்கொருவர் அளிக்கும் வாக்குறுதியில் நிலைபெற்றுள்ளது.


இலவச விநியோகத்திற்காக

"இதனால் கணவன் தம் தாய் தந்தையை விட்டுவிட்டு தம் மனைவியுடன் ஒன்றித்திருப்பார் இருவரும் ஒரே உடலாயிருப்பர்." என மறைநூல் கூறுகிறது. இதில் அடங்கியுள்ள மறைபொருள் பெரிது. இது திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் பொருந்துவதாகக் கொள்கிறேன். எப்படியும் உங்களுள் ஒவ்வொருவரும் தம்மீது அன்புகொள்வதுபோல தம் மனைவியின் மீதும் அன்பு செலுத்த வேண்டும். மனைவியும் தம் கணவருக்கு அஞ்சி வாழ வேண்டும்.

(எபே. 5:31-33)

இறைவன் தமக்குச் சமமாகப் படைக்கப்பட்ட மனிதனை படைப்புப் பணியில் பங்கேற்கச் செய்தார். திருமணத்தில் உடலுறவின் வழியாக இப்பணி நிறைவுறுகிறது. எனவே தான், இந்தத் திருமணம் மிகவும் உன்னதாமானதும் தூய்மையானதுமாகக் கருதப்படுகின்றது.

- **குழுக்களாகப் பிரிந்து பின்வரும் வினாக்களுக்கான விடைகளைத் தேடி அவற்றைப் பயிற்சிக் கொப்பியில் குறித்துக் கொள்ளவும்:**

❀ திருமண வாழ்வின் தூய்மையை அழித்து குடும்ப வாழ்வைச் சின்னாபின்னமாக்கும் நவீன உலகின் தீய சக்திகள் எவை?

❀ கிறிஸ்தவ குடும்பத்தில் வாழும் நீர் இவ்வாறான தீய சக்திகளுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுப்பது எவ்வாறு எனக் கலந்துரையாடி அவற்றைப் பயிற்சி நூலில் எழுதவும்.


இலவச விநியோகத்திற்காக

- பின்வரும் இறைவார்த்தைப் பகுதியை வாசித்துத் தியானிக்கவும்.
மத்தேயு 19:8-9, மாற்கு 10:1-12, லூக்கா 16:18.

ஒரு கத்தோலிக்க ஆண் அல்லது பெண்
திருச்சபையில் திருமணம் செய்துகொள்ள வேண்டும்.
அல்லது
திருச்சபையின் உத்தரவைப் பெற்றிருக்க வேண்டும்.
திருமணத்தைத் தகுதியான முறையில் பெறுவதற்கு
தம்பதியர்
தம்மை நன்கு ஆயத்தம் செய்ய வேண்டும்.
திருச்சபையின் திருமணச் சட்டங்களுக்குக்
கீழ்ப்படிய வேண்டும்.

கத்தோலிக்க திருச்சபையின்
மறைக்கல்வி # *1621*

**குடும்ப வாழ்வில் நுழையும்
தம்பதியினருக்குத்
தேவையான உதவிகளையும்,
அறிவுரைகளையும், ஆலோசனைகளையும்
கத்தோலிக்க திருச்சபை வழங்குகின்றது.**


இலவச விநியோகத்திற்காக

**அவையாவன:**

- **திருமணத்திற்கு முன்:**
  - இளம் பருவத்தை வெற்றிகரமாகச் சமாளித்திடவும், எதிர்காலத்தை உய்த்துணர்ந்திடவும் அவர்களுக்கு (இளைஞர், யுவதிகள்) சரியான வழிகாட்டலை வழங்குதல்.
  - பாலியல் உணர்வு, காதல் உணர்வு போன்றவை சம்பந்தமான விழிப்புணர்வை வழங்குதலும், தொழில் சார்ந்த தீர்மானங்களை எடுக்கவும், திருமணம், இறை அழைத்தல் போன்றவற்றைச் சுதந்திரமாகத் தேர்ந்தெடுப்பதற்கும் ஆயத்த கருத்தரங்கு, தியானம் போன்றவற்றை வழங்குதல்.
- **திருமணத்தின் பின்:**
  - திருமண வாழ்வை ஊட்டம் பெறச் செய்வதற்கான செயற்றிட்டங்கள். (கருத்தரங்குகள், பங்கில் ஏற்றுக்கொள்ளல்.)
  - நவீன உலகின் அழுத்தங்களுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுக்கும் விதமாக பங்கு, மறைக்கோட்ட மட்டத்தில் நடாத்தும் நிகழ்வுகள்.
  - இயற்கை குடும்பத்திட்டமிடல், குடும்பக் கட்டுப்பாடு, கருச்சிதைவு, விவாகரத்துப் பற்றிய விழிப்புணர்வு.
  - போதைவஸ்து, குடிபோதை போன்றவற்றில் இருந்து பாதுகாக்க வழிமுறைகள் அடங்கிய செயற்றிட்டம்.
  - குடும்ப வாழ்வைப் பாதுகாக்க திருச்சபையின் அப்போஸ்தலிக்க நிறுவனங்களின் செயற்பாடு. (குடும்ப ஒன்றியம், கத்தோலிக்க குடும்பக் கழகங்கள்.)

**தெரிந்து கொள்வதற்காக:**

- கிறிஸ்தவ திருமணம் ஓர் உடன்படிக்கை: கணவனும், மனைவியும் வாழும் வரை நீடிக்கும் உடன்படிக்கை.
- கிறிஸ்தவ திருமணம் ஓர் அருளடையாளம்: திருமணமாகும் ஆணும் பெண்ணும் இவ் அருளடையாளத்தை நிறைவேற்றுகின்றனர். குருவும் இறைமக்களும் சாட்சிகள் மட்டுமேயாவார்.
- கத்தோலிக்க திருமணத்தில் மணவிலக்கு (விவாகரத்து) இல்லை. அரசோ, நீதிமன்றோ குறுக்கிட்டு விவாகரத்து வழங்க முடியாது.
- இரத்த உறவு முறை, நெருங்கிய உறவு முறையினரைத் திருமணம் செய்வதைத் தவிர்த்தல்.
- உடல், உள வளர்ச்சி பெற்றிருத்தலும், உடல் உறவு பற்றியும், குழந்தை வளர்ப்புப் பற்றியும் தெரிந்திருத்தல்.



இலவச விநியோகத்திற்காக

**உமது அறிவுக்காக**

- உமது பங்கிலே, மறைக்கோட்டத்திலே, மறைமாவட்டத்திலே மேற்கூறப்பட்ட பணிகள், ஆலோசனைகள் வழங்கப்படுகின்றனவா எனத் தெரிந்துகொள்ளத் தகவல்களைச் சேகரியுங்கள்.
- இதற்காக பங்குத்தந்தை, அருட்சகோதரர், அருட்சகோதரிகள், மறையாசிரியர் போன்றவர்களிடம் இருந்து அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.
- இவ்வாறான உதவிகள், அறிவுரைகள், ஆலோசனைகள் தேவைப்படும் குடும்பங்கள் உமது பங்கிலே இருக்கின்றனவா என அறிந்து உதவி செய்யுங்கள்.
- கிறிஸ்தவராகிய நீங்கள் இச்செயற்பாடுகளில் ஈடுபட்டு அறிவுரை வழங்க முடியுமா எனச் சிந்தியுங்கள்.

**நினைவுக்கு...**

திருமண வாழ்வு தூய்மையானது.
அதை எவராலும் பிரிக்க முடியாது.

**உடன் படிக்கை**

இறைவனுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும்



கணவன்-மனைவி



கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும்.





இலவச விநியோகத்திற்காக